படுபவர்கள், சட்டத்தின் சந்து பொந்துகளிலே ஒளிந்து கொண்டும் அல்லது வக்கீலின் திறமையான வாதங்களால் காப்பாற்றப்பட்டும், வெளியே வந்துவிடுகிறார்கள். ஒரு சமுதாய அளவிலே இந்த சிந்தனை தேவை என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பாதிக்கப்பட்ட மக்களின் சார்பிலே மிக்க நன்றி. இப்போது இந்த பிரவுன் சுகர் என்பது இந்தியாவிலே அது இல்லை. வெளிநாட்டிலிருந்துதான் வருகிறதாம். அதை இவ்வளவு கொண்டு வந்தால், அதாவது 1 கிலோ கொண்டு வந்தால்—ஃபாரினர்ஸ் அங்கேயிருந்து வருகிறார்கள் என்று வையுங்கள்—அவர்கள் 1 கிலோ கொண்டு வந்தால், 1 கோடி ரூபாய்க்கு அது விற்கிறதாம். அதற்கு ரொம்ப விலையாம். அதை எல்லாம் சொல்கிறார்கள். ஆகையினாலே இந்த பிரவுன் சுகர் எப்படிக் கிடைக்கிறது, அதை எப்படி மாணவர்கள் உபயோகப்படுத்துகிறார்கள் என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிந்து (குறுக்கீடு)—வெளிநாட்டிலேயிருந்து வருகிறதாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திறமையானவர்கள், இதை பலமுறைச் சொல்லியிருக்கிறேன் ஐயா—அந்தத் திறமையை எல்லாம் அவர்கள் பயன்படுத்தி, இதையெல்லாம் கடுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்கத் தயங்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஒத்துழைப்பும் இதற்குத் தேவை.

அரசு தொழிற்பயிற்சிக் கல்லூரி.

** 971*—**திரு. ஏ. ஜி. சம்பத் :**

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் அல்லது விழுப்புரம் தாலுகாவில் அரசு தொழிற்பயிற்சிக் கல்லூரி (I.T.I.) துவங்க அரசு முன்வருமா?

1991சனவரி 23]

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் அல்லது விழுப்புரம் தாலுக்காவில் தொழிற் பயிற்சி நிலையம் துவங்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஏ. ஜி. சம்பத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் வட்டம், திருக்கோவிலூர் வட்டம் ஆகியவைகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளாகும். அங்குள்ள மாணவர்கள் ஐ.டி.ஐ. படிப்பதற்கு கடலூர், உளுந்தூர்பேட்டைக்குச் சென்றுதான் படிக்க வேண்டும் என்கிற சிரமமான நிலை இருக்கிறது. மேலும் இடம் கிடைப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் உள்ளதாக அறிவித்து இருக்கிறார்கள். இந்த நிதியாண்டிலேயே அதைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் இந்தியா முழுவதும் 30 லட்சம் பேர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்றும், ஆங்காங்கேயிருக்கிற மாநில அரசுகள் மிகவும் பிற்பட்ட பகுதிகளிலே தொழில் பயிற்சி நிலையங்களை அமைக்க வேண்டும் என்றும், வேண்டுகோள் விடுத்து, தமிழகத்தின் சார்பாக 10 இடங்களிலே இதுபோன்ற நிலையங்களை அமைக்கிறோம் என்று நாங்களும் மத்திய அரசுக்கு பதில் சொல்லி, அதன் பிறகு, அதற்கான நிதி உதவியை பின்னாலே வந்தவர்கள் தர முடியாது என்று சொன்ன காரணத்தால், இன்று அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. இன்னும் இப்போது புதிதாக ஆரம்பிக்கப்படுகிற தொழிற் பயிற்சி நிலையங்கள் எல்லாம் பெண்களுக்காக ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதைத் தீவிரப்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனை

**12217*—திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பூரில் உள்ள தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் நியமிக்கவும், போதுமான மருந்துகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?